தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் 11.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11190/D/2019**

திரு. சி.ஓவியர் ஆனந்த் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர், பழங்குடியினர் நலம், கள்ளக்குறிச்சி மாவட்டம் ... பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 12.07.2019 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 07.08.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 19.08.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 03.10.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 05.11.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (11.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு. சி.ஓவியர் ஆனந்த் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு. G.முருகன், கண்காணிப்பாளர், பழங்குடியினர் நலம், கள்ளக்குறிச்சி மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் சென்னை பழங்குடியினர் நலத்துறை அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், விழுப்புரம் மாவட்டத்தில் கல்வராயன் மலையில் இயங்கும் GTR மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி (ம) ஆரம்பப் பள்ளிகளில் பழங்குடி நலத்துறை இயக்குனர்களால் வழங்கப்படும் பலகோடி ரூபாய் மாணவர்களுக்கு வழங்கப்படும் தொகை பற்றிய முழு விபரம், மேலும் 34 பள்ளிகள் மற்றும் விடுதிகளின் முழு விபரம், அரசு ஆணைப்படி மாணவர்களுக்கு நாள்தோறும் விடுதியில் வழங்கப்படும்

உணவு அட்டவணை நகல், அனைத்துப் பள்ளிகளிலும் கழிவறை, போதுமான கட்டிட வசதிகள் பற்றிய விபரம், அரசால் வழங்கப்பட்டுள்ள பெண்கல்வி ஊக்கத்தொகை பற்றிய முழு விபரம், அரசு கட்டுப்பாட்டில் உள்ள பள்ளியில் பணி செய்யும் தலைமை ஆசிரியர் மற்றும் பள்ளி விடுதி பணியாளர்களின் முழு விபரம், மாலை நேரம் சிறப்பு வகுப்பிற்கு ஒவ்வொரு மேல்நிலை / உயர்நிலைப் பள்ளிக்கு அரசால் வழங்கப்படும் தொகையின் முழு விபரம், 2016-2017, 2017-2018, 2018-2019-ம் கல்வி ஆண்டில் ஆதிதிராவிடர் நலத்துறையில் இருந்து பழங்குடியினர் நலத்துறை தனியாக பிரிந்த பிறகு கல்வராயன் மலையில் உள்ள பள்ளிகளின் தரம் உயர மேம்பாட்டிற்கு கட்டிட வசதிக்காக எந்தெந்த பள்ளிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது தொடர்பான முழு விபரம், உள்ளிட்ட விவரங்களை மொத்தம் ஆறு இனங்களில் ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. இவ்வாணையத்தின் 05.11.2020 நாளிட்ட விசாரணையில் கீழ்க்கண்ட உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன :-

> *4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற மனுதாரர் தனக்கு உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், தான் இவ்வலுவலகத்தில் தற்போது தான் பணியில் சேர்ந்ததாகவும், இது தொடர்பாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்க கால அவகாசம் வேண்டுமென்றும் தெரிவித்தார்*
>
> *5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்குவது தொடர்பாக, பொதுத் தகவல் அலுவலர் கால அவகாசம் கோரியதைக் கருத்தில் கொண்டு இவ்வழக்கின் தொலைபேசி வாயிலான விசாரணை எதிர்வரும் 11.11.2020 அன்று முற்பகல் 11.30 மணிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. அன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் கள்ளக்குறிச்சி மாவட்டம், பழங்குடியினர் நல அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மனுதாரர் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.*

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற மனுதாரர் தனக்கு நாளதுவரையிலும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரிய கல்வராயன் மலையில் இயங்கும் GTR மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி (ம) ஆரம்பப் பள்ளிகளில் குறைவான மாணவர்கள் பயில்கிறார்கள் என்றும், ஆனால், அதிகமான மாணவர்கள் பயில்கிறார்கள் என்றும், அம்மாணவர்களுக்கு Scholarship மற்றும் உணவு வழங்கப்படுவதாக அரசுக்கு தெரிவித்து பொய் கணக்கு காட்டுகிறார்கள் என்றும், இது தொடர்பாக, 2015 முதல் 2020 வரை ஒவ்வொரு வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையையும், 8ஆம் வகுப்பில் எத்தனை மாணவர்கள் பயில்கிறார்கள், 10ஆம் வகுப்பில் எத்தனை மாணவர்கள் பயில்கிறார்கள் மற்றும் எத்தனை மாணவர்கள் இடைநீற்றல் (Discontinue) செய்தார்கள் என்ற தகவல்களை தனக்கு பெற்று வழங்குமாறு தெரிவித்தார்.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், பொது அதிகார அமைப்பினால் மனுதாரருக்கு நாளதுவரையிலும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. எனவே, மனுதாரர் கோரியுள்ள அனைத்து தகவல்களையும் இவ்வாணை கிடைக்கப்பெற்ற இருபது நாட்களுக்குள் மனுதாரருக்கு வழங்க கள்ளக்குறிச்சி மாவட்டம், பழங்குடியினர் நல அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகிறது. மேலும், மனுதாரருக்கு நாளதுவரையில் தகவல் வழங்க மறுத்த காரணத்திற்காக பொதுத் தகவல் அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 20(2)ன்கீழ் ஏன் பரிந்துரைக்ககூடாது என்பதற்கான விளக்கத்தை ஒரு மாத காலத்திற்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க

கள்ளக்குறிச்சி மாவட்டம், பழங்குடியினர் நல அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11190/D/2019</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
பழங்குடியினர் நலம், கள்ளக்குறிச்சி மாவட்டம்

**<u>மனுதாரர்:-</u>**
திரு. சி.ஓவியர் ஆனந்த், த/பெ.சின்னசாமி,
டாக்டர் அம்பேத்கர் நகர்,
வடக்கனந்தல், சின்னசேலம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

Copy to: File
DGPC 12.11.2020